புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

# ஆற்றுப்படையில் விருந்தோம்பல்

முனைவர் அ.பாரதிராணி,
உதவிப் பேராசிரியர்,
தமிழ் உயராய்வு மையம்,
அழகப்பா அரசுக் கலைக்கல்லூரி,

ஆய்வுச்சுருக்கம்

இலக்கணச் செழுமையும் வளமையும் கொண்டதே சிறந்த பனுவல்களாகும். இலக்கியம் கண்டு இலக்கணம் இயம்புதலும், இலக்கணம் கண்டு இலக்கியம் இயம்புதமும் ஒரு சமூகத்தின் வளர்ச்சிநிலையையும், ஆற்றல் சார்ந்த அறிவு நிலையையும் எடுத்துக்காட்டுகின்றன. அவ்வகையில் தமிழ்மொழியின் தனித்த அடையாளம் சங்க இலக்கியங்களே. பல்வேறு உத்திமுறைகளின் வழி சமூக ஒழுகலாறுகளைச் சுட்டிச் செல்லும் கருவூலமாகச் சங்க இலக்கியங்கள் விளங்குகின்றன. இவற்றுள் ஆற்றுப்படை இலக்கியங்கள் வெளிப்படுத்தும் பண்பாட்டுக் கூறுகளின் ஒன்றான விருந்தோம்பலை எடுத்துரைப்பதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

திறவுச்சொற்கள்

ஆற்றுப்படுத்துதல் _ வழிப்படுத்துதல், விருந்து _ புதிய, தேறல்கள், ஒல்குபசி _ தீராப்பசி, ஓம்புதல் _ காத்தல், இன்புளிவெஞ்சோறு _ புளியோதரை, பண்பாடு _ பண்படுத்துதல்.

## முன்னுரை

சங்க நூல்களான பத்துப்பாட்டும் எட்டுத்தொகையும் தொன்மைத் தமிழர்களின் வாழ்வியலையும் வரலாற்றையும் எடுத்துரைக்கும் கருத்துப்பேழை. அகப்புறவாழ்வில் மனிதன் கொள்ளும் ஆளுமையின் வெளிப்பாடாக விழுமியங்கள் நிலைநிறுத்தப்பட்டுள்ளன. கல்வி, ஒழுக்கம், ஈகை என வரையறை செய்யப்படும் பண்பாட்டுப் பதிவுகளின் வரிசையில் 'விருந்தோம்பல்' என்பது முதன்மை பெறுகிறது. பகிர்ந்து உண்ணும் பண்பினை உடையவர்களாகவே பண்டையோர் வாழ்ந்துள்ளனர் என்பதின் அடையாளமே ஆற்றுப்படை இலக்கியங்கள். அன்புடன் விருந்தோம்பும் பண்பினை இவ்விலக்கியங்கள் எங்ஙனம் வெளிப்படுத்துகிறது என்பதை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் தலையாய சிந்தனையாம்.

## பண்பாடு

மனிதனைப் பண்படுத்துவதே பண்பாடாம். "பண்பாடு என்னும் சொல் மனிதனோடு மட்டுமே தொடர்புடையது. இதுவே பிற உயிரினங்களிடமிருந்து மனிதனைப் பிரித்துக் காட்டுகிறது. மனிதன் மட்டுமே பண்பாட்டைக் கொண்ட விலங்காவான்"[1] என்பார் பக்தவத்சலபாரதி மக்களின் நடத்தை முறைகளின் கட்டுக்கோப்பான செயல்படுத்தும் அமைப்பினையே பண்பாட்டின் உட்கூறுகள் வெளிப்படுத்துகின்றன.

ஒரு பண்பாட்டைச் சேர்ந்தோரின் வாழ்வியலுக்கும், நடத்தை முறைகளுக்கும் நெருங்கிய தொடர்புடைய பண்புநலன்களைப் பண்பாட்டுப்படிமத்தில் பதியச்செய்தனர் தொன்மையர். ஒரு மனிதனின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவதும் பண்பாடே. பண்பாட்டினை வாழ்வியலின் அனைத்துக் கூறுகளும் உள்ளடக்கிய ஒரு செயற்பாட்டியல் முறை என்றால் மிகையில்லை. சமுதாய நோக்கத்தையும் நெறிமுறைகளையும் சிறப்பாக வெளிப்படுத்துவதில் பண்பாட்டிற்குத் தனித்துவம் உண்டு. அப்பண்பாட்டின் ஒரு கூறே விருந்தோம்பல் பண்பாம்.

"பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்று ளெல்லாம் தலை"[2] (கு.எ.322)

என்ற வள்ளுவரின் சொற்படி பகுத்துண்டு வாழும் பண்பினைப் பண்டைத் தமிழரின் விருந்தோம்பல் எடுத்து விளக்கியுள்ளது.

விருந்தோம்பல்

விருந்தோம்பல் என்பது நாட்டில் பரவலான பண்பாட்டின் கூறு என்றாலும் தமிழ் இனத்திற்கான தணித்த அடையாளமாக விளங்குகிறது. புதிதாக வருபவர்களையே விருந்தினர் என்றுரைக்க வழி காட்டுகிறது தொல்காப்பியம்.

"விருந்தே தானும் புதுவது புனைந்த யாப்பின்மேற்றே"[3] (தொல் – செய்-231)

விருந்து என்பது புதுமை என்ற பொருளையே முன்னிறுத்துகிறது. ஓம்புதல் என்பது போற்றுதலைக் குறிக்கிறது. ஆக புதுமையைப் போற்றுதலே விருந்தோம்பல் என்ற பொருள் புரிதலைப் பண்டு இலக்கியங்கள் எடுத்துரைத்துள்ளன. ஊடலை அகற்ற, களவு, கற்பு ஒழுக்கத்தில், வினைமுடித்து மீளல், செலவழுங்குவித்தல் எனப் பல்நிலைகளில் விருந்தோம்பல் நடைபெற்றதை அகப்புற இலக்கியங்கள் எடுத்துரைத்துள்ளன. ஆயினும் ஆற்றுப்படை இலக்கியங்கள் உணர்த்தும் விருந்தோம்பல் அறியாதவரைப் போற்றுதல் என்னும் பண்பினைத் தெற்றெனப் புலப்படுத்துகின்றது.

ஆற்றுப்படை

வறியவர் வளமை பெற வேண்டி வழிப்படுத்தும் பண்பினையே ஆற்றுப்படை முன்னிறுத்துகிறது. 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என பொதுநிலை நோக்கினையே ஆற்றுப்படை இலக்கியங்கள் வழிமொழிகின்றன. ஆறு என்பது நெறி, வழி எனப் பொருள் கொள்ளப்பட்டு ஆற்றுப்படுத்துதல் – வழிப்படுத்துதல் என்ற நிலையைச் சுட்டுகிறது.

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீ இச்
சென்று பயன் எதிரச் சொன்னபக்கமும்"

என்ற ஆற்றுப்படை இலக்கணம் ஆற்றுப்படுத்தும் மறபினை பயிற்றுவிக்கிறது. கூத்தர், பாணர், பொருநர், விறலியர் என எவரைக் காணினும் வள்ளல்களிடம் அவர்களை ஆற்றுப்படுத்தும் நோக்கினைக் கொண்டே செயல்பட்டுள்ளனர்.

ஆற்றுப்படையின் விருந்தோம்பலில் கொடுத்தவரின் உயர்ந்த உள்ளமும் பெற்றவரின் பரந்த நோக்கும் தெற்றெனப் புலப்படுத்துப்பட்டுள்ளது.

"விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற்றன்று"[4] (குறள்82)

என்ற குறளின் சிந்தனை புறநானூற்றின்

"உண்டாலம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே"[5] ( புறம். 182)

என்ற பெருவழுதியின் பாடலையே முன்னிறுத்துகின்றது. இந்திர உலகத்தின் அமிழ்தாயினும் பிறருக்குப் பகிர்ந்து கொடுத்து உண்ணும் மரபைப் பெற்றிருந்தார் தமிழர் என்பதை நிறுவுகிறது.

சிறுபாணாற்றுப்படையில் விருந்தோம்பல்

சிறிய யாழை இசைத்துப்பாடும் திறம் கொண்டவர்களையே சிறுபாணர் என்பர். இந்தப் பாணர்களை ஆற்றுப்படுத்தும் தன்மையையே சிறுபாணாற்றுப் படை எடுத்து விளம்புகிறது. நல்லியக்கோடனிடம் பரிசில் பெற்று மீளும் சிறுபாணன் ஒருவன் வழியில் வறுமையில் வாழும் பாணன் ஒருவனை வள்ளல நல்லியக்கோடன்பால் ஆற்றுப்படுத்துவதே இப்படை நூலாம்.

நல்லியக் கோடன் குறிஞ்சி நாட்டுத்தலைவன் அவனைக் காண வருபவர்கள் நெய்தல் நிலம், எயிற்பட்டினம், முல்லை நிலம், மருதநிலம் ஆகியவற்றைக் கடந்து செல்வதே நெறியாம். அவ்வாறு செல்லும்போது ஒவ்வொரு நிலத்தில் உள்ளவரும், அவர்களின் நிலத்திற்கு உரிய உணவு முறைகளாலே விருந்து உபசரணை செய்கின்றனர். எயினர் வாழும் ஊரைக் கடந்து

செல்லுங்கால் இனிய புளிச்சோறினை ஆமானின் இறைச்சியுடன் பசியாற்றுவர் எயினர் பெண்கள் என்பதை,

''எயிற்றியர் அட்ட இன்புளி வெஞ்சோறு
தேமா மேனிச் சில்வளை ஆயமொடு
ஆமான் சூட்டின் அமைவரப் பெறுகுவீர்'' (சிறுபா.175-177)

என்ற அடிகள் வழி விளக்குகின்றார்.

கிடைக்கும் பொருளின்வழி சிறப்பாக விருந்தோம்பி விருந்தினரின் மனத்தை மகிழ்விக்கும் தமிழரின் மாண்பினை சிறுபாணாற்றுப்படை எடுத்து மொழிகின்றது. பாணர்கள் வறியநிலையில் இருந்தனர். ஆயினும் மற்றோர்கள் தூற்றாத வகையில் உப்பில்லா குப்பைக் கீரையை தன்சுற்றத்தோடு பகிர்ந்துண்ணும் மரபினைப் பெற்றிருந்ததை,

ஒல்குபசி உழந்த ஒடுங்குநுண் மருங்குல்
வளைக்கை,கிணைமகள் வள்உகிர் குறைத்த
குப்பைவேலை உப்புஇலி வெந்ததை
மடவோர் காட்சி நாணி, கடைஅடைத்து,
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் மிசையும்
அழிபசி வருத்தம் வீட.... (சிறுபா.135-140)

என்ற அடிகள் விளக்கி நிற்கிறது. இத்தகு வறுமை நிலையிருந்து மீட்சிபெற நல்லியக்கோடனை நாடிச்சென்ற பாணர்களை ஆமுர் மக்கள் தங்கள் நிலத்தில் கிடைத்த வெண்சோற்றினை நண்டுக்கலவையுடன் உண்ணத் தருகின்ற காட்சியை,

''வலம்பட நடக்கும் வலிபுணர் எருத்தின்
உரன் கெழு நோன் பகட்டு உழவர் தங்கை,
பிடிக்கை அன்ன பின்பை வீழ் சிறுபுறத்து,
தொடிக்கை மகடூஉ மகமுறை தடுப்ப
அவைப்பு மாண்அரிசி அமலை வெண்சோறு,
கவைத்தாள் அலவன் கலவையொடு பெறுவீர் (சிறுபா.187-195)

என்று படம் பிடித்துக் காட்டுகிறார்.''மன்னன் எவ்வழியோ மக்களும் அவ்வழியே'' என்று வாழும் மரபு தழிழனுடையது. மன்னர்கள் மக்களின் நலம்பாடிகள். அவர்கள் செழுமையுடன் வாழ்வதையே மன்னர்கள் விரும்புவர்.

'' படைகுடி கூழ் அமைச்சு நட்பரண் ஆறும்
உடையனாம் அரசருள் ஏறு ''[6] ( கு.எ.381 )

என்று வள்ளுவர் அரசனின் பண்பினை எடுத்துக் காட்டுகின்றார். எனவே குடி ஓம்புதல் மன்னனின் தலையாய கடமையாம் .இத்தகு மன்னன் வறியோராய் வந்துள்ள பாணர்களைப் புறந்தள்ளாது அவர்களைத் தன்னருகில் அமர்த்தி அவர்களுக்கு கலிங்கம் நல்கி, தேறலுடன் பல்வேறு சுவையுடைய உணவினை முன்னின்று உண்ணச்செய்த அழகிய நிலைப்பாட்டை

''பாம்பு வெகுண்டன்ன தேறல் நல்கி,
காஎரி யூட்டிய கவர்கணைத் தூணிப்
பூவிரி கச்சைப் புகழோன் தன்முன்
பனிவரை மார்பன் பயந்த நுண்பொருட்
பனுவலின் வழாஅப் பல்வேறு அடிசல்
வாள்நிற விசும்பின் கோள்மீன் சூழ்ந்த
இளங்கதிர் ஞாயிறு எள்ளும் தோற்றத்து
விளங்குபொற் கலத்தில் விரும்புவன பேணி,
ஆனா விருப்பின் தான்நின்று ஊட்டி'' ( சிறுபா.237-345 )

என்று விளக்கி வரைகிறது '' அரச குணம் என்பது தான் மட்டும் பதுக்கிக் கொண்டு உண்பது இல்லை. அனைவருக்கும் அளிப்பதுதான் ராஜகுணம். பலரோடு அமர்ந்து, சமமாக நடத்தி உணவை உண்ணும்போது தான் பரந்த உள்ளம் வெளிப்படுகிறது. உணவில் தான் ஒருவர் தன் பெருந்தன்மையைக்காட்ட முடியும். யாரெல்லாம் மற்றவர்களையும் சமமாக அமரவைத்துச் சாப்பிட வைக்கிறார்களோ அவர்கள் அரச குணம் கொண்டவர்களாகவே கருதப்படுவார்கள் ''[7] என்ற கூற்றும் இங்கு ஒப்பு நோக்கத் தக்கதாய் இடம் பெறுகிறது.

"நீசில மொழியா அளவை மாசில்

காம்பு சொலித்தன்ன அறுவை உடிஇ“ (சிறு பா 285 -286)

எனக் கந்தலாடை அகற்றி சிறந்த ஆடையை வழங்கிய பண்பு விளக்கப்பட்டுள்ளது.

பெரும்பாணாற்றுப்படையில் விருந்தோம்பல்

தொண்டைமான் இளந்திரையனைச் சந்திக்கச் செல்லும் கடியலூர் உருத்திரங்கண்ணார் தாம் சந்திக்கும் விருந்தோம்பல் நிகழ்வினை சிறப்புற எடுத்து மொழிகின்றார். வளமையானோர் உடல்உறுதியுடன் இருக்க உரலில் அரசியை இட்டு குத்தியெடுத்து உணவு சமைத்துப்பரிமாறிய செய்தியையும், புல்லரிசினைச் சோற்றினைக் கருவாட்டுடன் தேக்கிலையில் வைத்தக் கொடுத்த நிகழ்வும் எழிலுற எடுத்துக்காட்டப்படுகிறது. சிறுகுடிலில் வாழும் இயிற்றியார். விளிம்புகள் உடைந்த பானைகளிலும் புல்லரிசி இட்டு உணவு சமைத்தாலும் இன்முகத்துடன் மனமுவந்து விருந்தினை உபசரித்த பொக்கினை எடுத்துக்காட்டுகின்றது பெரும்பாணாற்றுப்படை. பெரிய யாழைக் கொண்டு இசைமீட்டும் செறிவு கொண்ட பாணர்கள் உள்ளம் மகிழுமாறு,

“தெய்வ மடையின் தேக்கிலைக் குவை இறும்,
பைதீர் கடும்பொடு பதம் மிகப் பெறுகுவிர் ” ( பெரும்பா- 104-105)

என்று கொடுத்ததும்.

உறை அமை தீம்தயிர் கலக்கி, நுரைதெரிந்து
புகர்வாய்க் குழிசி பூஞ்சுமட்டு இரீஇ....
மடிவாய்க் கோவலர் குடிவயிற் சேப்பின்
இருங்கிளை ஞெண்டின் சிறுபார்ப்பு அன்ன
பசுந்தினை மூரல் பாலொடும் பெறுகுவீர் ( பெரும்பா.467-470)

என மோர் விற்றதில் கிடைத்த நெல் கொண்டு சுற்றம் ஓம்பும் இடையர் மகள் தினைச்சோற்றைப் பாலுடன் பருகத் தருகின்ற பாங்கமைப் பண்பாடாம் விருந்தோம்பல் திறத்தைப் பெரும் பாணற்றுப்படை இங்ஙனம் எடுத்து மொழிகின்றது.

பெரும்பானாற்றுப்படையில் பாணர்களுக்குக் கலிங்கம் நல்கிய காட்சியை,

“அந்நிலை அணுகல் வேண்டி நின்னரைப்
பாசி யன்ன சிதர்வை நீக்கி
ஆவி யன்ன அவிர்நூற் கலிங்கம்
இரும்பேர் ஒக்கலொடு ஒருங்குடன் உடீஇ ” ( பெரும்பா-467,470)

என்று எடுத்துக் காட்டுகிறது.

மன்னனைச் சந்தித்தும் பாணர்களின் நிலைகண்டு அவர்களை விரும்பி அழைத்து உடைமாற்றி பாலாவி போன்ற ஆடை நல்கிய நிலை சுட்டப்படுவதிலிருந்து மன்னன் மக்களைக் காத்த மென்மை நிலைப்பாடு எடுத்துரைக்கப்படுள்ளது. அமிழ்தம் போன்ற உணவினை விண்மீன் போன்ற வெள்ளிக் கலத்தில் கொடுத்த காட்சியில், தாய் பிள்ளையைக் காப்பது போன்று வற்புறுத்தி உணவு படைத்த பாங்கு ,

மீன் G+த் தன்ன வான்கலம் பரப்பி,
மகமுறை மகமுறை நோக்கி, முகன்அய்ந்து
ஆனா விருப்பின் தான் நின்று விரட்டி,
மங்குல் வானத்துத் திங்கள் ஏய்க்கும்’’ (பெரும்பா -477-480)

என்று திறம்பட மொழியப் பட்டுள்ளது.

பொருநர் ஆற்றுப்படையில் விருந்தோம்பல்

கரிகாற் பெருவளத்தானை முடத்தாமக் கண்ணியர் பாடியதே பொருநாற்றுப்படையாம். பொருநன் வழியாக கரிகாற் பெருவளத்தானின் புகழினை எடுத்துரைப்பதே இந்நூல். மன்னன் விருந்தோம்பிய சிறப்பு நிலை இந்நூலில் கொற்றமாய் உயர்ந்து நிற்கிறது. பொருநர்களைத் தம் கேளீர் போன்ற வாரித்து, எலும்பு உருகும்படிப் பார்த்து, ஈரும் பேனும் நிறைந்து, நைந்துபோன ஆடையைக் களைந்து இழைபோன வழியறியா ஆடையை ஈந்த நிகழ்வினை,

"கேளீர் போல கேள் கொளல் வேண்டி...
பருகு அன்ன அருகா நோக்கமோடு,
உருகுபவை போல் என்புகுளிர் கொளீஇ
ஈரும் பேனும் இருந்து இறைகூடி
வேரொடு நனைந்து, வேற்று இழை
துன்னர் சிதாஅர் துவர நீக்கி...

நோக்கு நுழைகல்லா நுண்மைய G+க்கணிந்து

அரவு உரி அன்ன அறுவை நல்கி"  (பொருந-74,76-80,82-83)

என்ற அடிகள் சுட்டுகின்றன. ஆடை நல்குவதோடு மட்டுமின்றி உணவிட்டு ஓம்பிய முறையினை

"முரவை போகிய முரியா அரிசி
விரல் என நிமிர்ந்த நிரல்அமை புழுக்கல்,
புரல்வறைக் கருணை,காடியின் பிதப்ப
அயின்ற காலை பயின்று இனிது இருந்து
கொல்லை உழுக்கோழு ஏய்ப்ப பல்லே
எல்லையும் இரவும் ஊன்தின்று மழுங்கி,
உயிர்ப்பிடம் பெறாது ஊண் முனிந்து."  (பொருந-113-119)

என்ற அடிகளால் எடுத்துக்காட்டுகிறார். கண்ணியார் பற்கள் தமது கூர்மையை இழக்கும் வண்ணம் இரவும் பகலும் இறைச்சி கொடுத்து உடனிருந்து கரிகாளப் பெருவளத்தான் கவனித்த நிகழ்வின் வழி விருந்தோம்பல் பண்பு தெற்றெனப் புலப்படுத்தப்படுகின்றது.

தொகுப்புரை :

- விருந்தோம்பல் என்பது பண்டைத் தமிழரின் தலையாய மரபென்பதை அறியலாகிறது,
- பொருள்தேடி வறியநிலை மாற்ற விரைந்து செல்லும் பாணர், பொருநர்களை வழியில் உள்ள ஊரினர் இன்னகை புரிந்து தம் இல்லம் இருத்தி தம்மிடம் உள்ள பொருட்களைக் கொண்டு, அவர்களின் மகிழும் வண்ணம் உணவு பரிமாறிய உயர்ந்த போக்கினைக் காணமுடிகிறது.
- நிலங்களுக்கு ஏற்ப மக்கள் வழி வந்தோரை விருந்தாகப் பாவித்து அகநக நயந்து உணவு கொடுத்து பசியாற்றிய பண்பினைக் காண இடமளிக்கிறது.
- மக்கள் மட்டுமின்றி தன்னை நாடி வந்த பாணர், பொருநர், விறலியரை, முகநக நயந்து முன்னின்ற அவர்களின் தேவையை அறிந்து தாய்போல் முகம் நோக்கி உணவிட்டு விருந்தோம்பிய மன்னர்களின் வாழ்வியலைக் கற்றுணரக் களம் அமைக்கின்றது.
- விருந்தோம்பல் என்பது வெறும் உணவு படைப்பது மட்டுமன்று, அவர்களின் தேவை உணர்ந்து, உடைதந்து, உறைவிடம் தந்து, அனைத்து வசதிகளையும் செய்து கொடுப்பதே என்ற ஒப்பற்ற சிந்தனையைத் தெளித்துச் செல்கிறது ஆற்றுப்படை இலக்கியங்கள.

சான்றெண் விளக்கம்

1. பண்பாட்டு மானிடவியல் -பக்தவத்சலபாரதி- பக்148
2. திருக்குறள் கலைஞர் உரை - மு.கருணாநிதி -பக்.65
3. தொல்காப்பியம் பொருள் அதிகாரம் – ச.திருஞானசம்பந்தம்- பக் 354
4. திருக்குறள் கலைஞர் உரை - மு.கருணாநிதி பக்- 17
5. புறனாநூறு அ.மா.பரிமணம் - பக் 442
6. திருக்குறள் கலைஞர் உரை - மு.கருணாநிதி -பக்.77
7. இலக்கியத்தில் விருந்தோம்பல் - இறையன்பு பக்-89

துணை நூல் பட்டியல்

1. பண்பாட்டு மானிடவியல் -பக்தவத்சலபாரதி- பக்148.மெய்யப்பன் பதிப்பகம்- 1990.மு.ப

2. திருக்குறள் கலைஞர் உரை - மு.கருணாநிதி -பக்.65 திருமகள் நிலையம் - மு.ப.1996

3. தொல்காப்பியம் பொருள் அதிகாரம் – ச.திருஞானசம்பந்தம்- பக் 354- கதிர்பதிப்பகம் மு.ப 2018

4. திருக்குறள் கலைஞர் உரை - மு.கருணாநிதி பக்- 17 திருமகள் நிலையம் - மு.ப.1996

5. புறனாநூறு அ.மா.பரிமாணம் - பக் 442 –நியூ செஞ்சுரி புக் ஹவுஸ்

6. திருக்குறள் கலைஞர் உரை - மு.கருணாநிதி -பக்.77 திருமகள் நிலையம் - மு.ப.1996

7. இலக்கியத்தில் விருந்தோம்பல் - இறையன்பு பக்-89
கற்பகம் புத்தக நிலையம்- மு.ப.2020

********* ********* ********** ********* ********* ********** ********** **********